**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 157/2023 P.W. 2/L.W.6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சசி** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. தேன்மணி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20.09.2023.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஆரல்வாய்மொழியில் சந்திப்பில் ஸ்ரீகோல்டு என்ற பெயரில் நிறுவனம் நடத்தி வருகிறேன். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். 2022 ம் வருடம் டிசம்பர் மாதம், தேதி சரியாக ஞாபகமில்லை. காலை 11.00 மணி அளவில் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் இருவரும் கடைக்கு வந்தார்கள். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களில் ஆண் நபர் தனது மனைவிக்கு பிரசவம் பார்க்க வேண்டும் என்றும் தனது மனைவிக்கு கல்யாணத்தின் போது செய்த நகைகள் சுமார் 25 பவுன் எடையுள்ள நகைகளை என்னிடம் கொண்டு வந்தார்கள். அதை வாங்கிக்கொண்டு சுமார் 7,50,000 இலட்சம் ரூபாய் ஈடாக கொடுத்தேன். 30.12.2022 ம் தேதி குளச்சல் காவல்நிலையத்திலிருந்து என் கடைக்கு காவலர்கள் வந்து திருட்டு நகை வாங்கியதாக என்னை விசாரித்தார்கள். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களிடம் திருட்டு நகை என்று தெரியாமல் நகையை வாங்கிவிட்டதாக கூறினேன். அந்த நகைகளை போலீசார் கடையில் வைத்து கைப்பற்றினார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

**1.** நான் மேற்படி நகை அடமானம் பிடிக்கும் தொழில் செய்யும் சங்கத்தில் உறுப்பினராக இல்லை. எங்களது சங்கத்தில் இருந்து காவல்துறையினர் அத்துமீறி வந்து

நகைகளை பறித்துக் செல்வதாக போராட்டம் நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். 31.12.2022 ம் தேதிக்கு 2 தினங்களுக்கு முன் ஷாபுமோன் என்னை போணில் அழைத்து 4 பவுன் நகையை விற்கவேண்டும் என்று கூறினாரா என்றால் இல்லை. 31 ம் தேதி என் கடைக்கு டாடா சுமோவில் 7 காவலர்கள் வந்தார்கள். 7 பேரும் மப்டியில் தான் வந்தார்கள். பெண் காவலர் ஒருவரும் வந்தார். அவர் யூனிபார்ம்ல் தான் வந்தார்.

2. போஸ்கோ என்ற காவலர் வந்திருந்தாரா என்றால் எனக்கு பெயர் தெரியாது. நான் என்னுடைய காரில் தான் வந்தேன். என்னை 2 காவலர்கள் தான் அழைத்தார்கள். ஷாபுமோன் என்னை அழைக்கவில்லை. என்னை காவல்துறையினர் ஆபிசில் தான் வந்து கூப்பிட்டார்கள். நான் அடமான நகைகளை விலைக்கும் வாங்குவேன். நான் அடகு நகையை விலை கொடுத்து மீட்டு அதைப்பெற்றுக்கொண்டு மீதத்தொகையை கொடுப்பேன் என்று சொன்னால் சரிதான்.

3. நான் அதுபோல் முத்தூட் பேங்கர்சில் 08.03.2022, 11.03.2022 ஆகிய தேதிகளில் பணம் கொடுத்து நான் அவர்கள் நகையை மீட்டுக்கொடுத்தேன் என்றால் நான் அவ்வாறு போகவே இல்லை. நான் கொடுத்த நகைகள் எனக்கு ஞாபகம் உள்ளதா என்றால் நாட்கள் ஆகிவிட்டதால் ஞாபகமில்லை. நாங்கள் அடகு நகை வாங்கினால் பொதுவாக அன்றையதினமே உருக்கிகட்டியாக மாற்றிவிடுவோம் என்று சொன்னால் சரிதான். அவ்வாறே மேற்படி முத்தூட் நிறுவனத்திலிருந்து மீட்கப்பட்ட நகையையும் நான்உருக்கி விட்டேன் என்று சொன்னால் சரிதான். என்னை கீழே கூட்டி வந்தது 2 பேர், மேலே வந்தது 7 பேர். என்னை குளச்சல் காவல்நிலையத்தின் பின்பக்கம் ஒரு அறையில் உட்கார வைத்திருந்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

4. என்னுடன் குளச்சல் காவல்நிலையத்தில் எங்கள்பகுதியைச் சேர்ந்த ரியான் கோல்டு உரிமையாளர் மற்றும் அம்மை அப்பா ஜுவலர்ஸ் ஆகியோர்கள் இருந்தார்களா என்றால் நிறைய பேர்கள் இருந்தார்கள், யார் என்று எனக்குத் தெரியாது. மேற்படி இரு நகை கடை உரிமையாளர்களும் போலீசார் கேட்ட நகையை உடனே கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் அது எனக்குத் தெரியாது. நான் குளச்சல் காவல்நிலையத்தில் ஒருநாள் இருந்த சமயத்தில் மேற்படி 25 பவுன் நகையை யார் கொண்டு கொடுத்தார்கள் என்றால் என் மனைவி கொண்டு வந்து கொடுத்தார். என் மனைவி அவரது சொந்த நகையை கொண்டு வந்து கொடுத்தார். மேற்படி 25 பவுன் நகையும் எனது வீட்டம்மாவின் சொந்த நகையாகும்.

5. இவ்வாறு காவல்துறையினர் நகைகளை கைப்பற்றுவதால் இந்த மாதிரியாக நகை தொழில் செய்யும் வியாபாரிகள் குடும்பம் மொத்தமாக தற்கொலைச் செய்துக்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். நான் என் வீட்டம்மாவிடமிருந்து பெற்ற 25 பவுன் நகையை திருப்பிக்கொடுத்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கினால்

நான் பாதிக்கப்பட்டுள்ளேனா என்றால் எனக்குத் தெரியவில்லை. என் மனைவியின் நகை எனக்கு திரும்ப வேண்டுமா, வேண்டாமா என்றால் வேண்டாம். வேண்டாம் என்று ஏன் சொல்கிறேன் என்றால் கடவுள் பார்த்துக்கொள்வார்.நான் ஏறிய வண்டியில் ஷாபுமோனும் போலீசாரும் இருந்தார்கள் என்றால் எனக்கு அடையாளம் தெரியாது. அந்த இன்னொரு வண்டியில் யார் ஏறினார்கள் என்று எனக்குத் தெரியாது. குளச்சல் காவல்நிலையத்தில் இருந்த 2 நாட்களும் சாப்பாடு எல்லாம் தந்தார்கள். நகையை கொடுத்தவுடன் எனது மனைவியை விட்டுவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான். குளச்சல் காவல்நிலையத்திலிருந்து நானும் என் மனைவியும் தனித்தனியாக சென்றோமா என்றால் சேர்ந்து தான் சென்றோம்.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.